ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 9.2 – பொன்னிவர் மேனி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.2 – பொன்னிவர் மேனி

‡ பொன் இவர் மேனி மரகதத்தின் ⋆
பொங்கிளஞ்சோதி அகலத்தாரம் மின் ⋆
இவர் வாயில் நல் வேதம் ஓதும் ⋆
வேதியர் வானவர் ஆவர் தோழீ ⋆
என்னையும் நோக்கி என் அல்குலும் நோக்கி ⋆
ஏந்திளங்கொங்கையும் நோக்குகின்றார் ⋆
அன்னை என் நோக்கும் என்றஞ்சுகின்றேன் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.1** ‖

தோடவிழ் நீலம் மணம் கொடுக்கும் ⋆
சூழ் புனல் சூழ் குடந்தைக் கிடந்த ⋆
சேடர் கொல் என்று தெரிக்க மாட்டேன் ⋆
செஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி ⋆
பாடக மெல் அடியார் வணங்கப் ⋆
பன் மணி முத்தொடிலங்கு சோதி ⋆
ஆடகம் பூண்டொரு நான்கு தோளும் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.2** ‖

வேய் இருஞ்சோலை விலங்கல் சூழ்ந்த ⋆
மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம் ⋆
தாயின நாயகர் ஆவர் தோழீ ! ⋆
தாமரைக் கண்கள் இருந்தவாறு ⋆
சேய் இருங்குன்றம் திகழ்ந்ததொப்பச் ⋆

செவ்விய ஆகி மலர்ந்த சோதி ⋆
ஆயிரம் தோளொடிலங்கு பூணும் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.3** ‖

வம்பவிழும் துழாய் மாலை தோள் மேல் ⋆
கையன ஆழியும் சங்கும் ஏந்தி ⋆
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார் ⋆
நாகரிகர் பெரிதும் இளையர் ⋆
செம் பவளம் இவர் வாயின் வண்ணம் ⋆
தேவர் இவரது உருவம் சொல்லில் ⋆
அம் பவளத் திரளேயும் ஒப்பர் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.4** ‖

கோழியும் கூடலும் கோயில் கொண்ட ⋆
கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன ⋆
பாழியந் தோளும் ஓர் நான்குடையர் ⋆
பண்டிவர் தம்மையும் கண்டறியோம் ⋆
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில் ⋆
மா கடல் போன்றுளர் கையில் வெய்ய ⋆
ஆழி ஒன்றேந்தி ஓர் சங்கு பற்றி ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.5** ‖

வெஞ்சின வேழம் மருப் பொசித்த ⋆
வேந்தர் கொல் ஏந்திழையார் மனத்தைத் ⋆
தஞ்சுடை ஆளர் கொல் யான் அறியேன் ⋆
தாமரைக் கண்கள் இருந்த ஆறு ⋆
கஞ்சனை அஞ்ச முன் கால் விசைத்த ⋆
காளையர் ஆவர் கண்டார் வணங்கும் ⋆

அஞ்சன மா மலையேயும் ஒப்பர் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ॥ **9.2.6** ॥

பிணி அவிழ் தாமரை மொட்டலர்த்தும் ⋆
பேர் அருளாளர் கொல் யான் அறியேன் ⋆
பணியும் என் நெஞ்சம் இதென் கொல் தோழீ ! ⋆
பண்டிவர் தம்மையும் கண்டறியோம் ⋆
அணி கெழு தாமரை அன்ன கண்ணும் ⋆
அங்கையும் பங்கயம் மேனி வானத்து ⋆
அணி கெழு மா முகிலேயும் ஒப்பர் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ॥ **9.2.7** ॥

மஞ்சுயர் மா மதி தீண்ட நீண்ட ⋆
மாலிருஞ்சோலை மணாளர் வந்து ⋆
என் நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் ⋆
நீர் மலை யார் கொல் நினைக்க மாட்டேன் ⋆
மஞ்சுயர் பொன் மலை மேல் எழுந்த ⋆
மா முகில் போன்றுளர் வந்து காணீர் ⋆
அஞ்சிறைப் புள்ளும் ஒன்றேறி வந்தார் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ॥ **9.2.8** ॥

எண் திசையும் எறி நீர்க் கடலும் ⋆
ஏழ் உலகும் உடனே விழுங்கி ⋆
மண்டி ஓர் ஆல் இலைப் பள்ளி கொள்ளும் ⋆
மாயர் கொல் மாயம் அறிய மாட்டேன் ⋆
கொண்டல் நன் மால் வரையேயும் ஒப்பர் ⋆
கொங்கலர் தாமரைக் கண்ணும் வாயும் ⋆

அண்டத்தமரர் பணிய நின்றார் ⋆
அச்சோ ஒருவர் அழகியவா ! ‖ **9.2.9** ‖

‡ அன்னமும் கேழலும் மீனும் ஆய ⋆
ஆதியை நாகை அழகியாரை ⋆
கன்னி நன் மா மதிள் மங்கை வேந்தன் ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
குன்றா இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை ⋆
ஏழும் இரண்டும் ஓர் ஒன்றும் வல்லார் ⋆
மன்னவர் ஆய் உலகாண்டு ⋆
மீண்டும் வானவர் ஆய் மகிழ்வெய்துவரே ‖ **9.2.10** ‖

அடிவரவு — பொன் தோடு வேய் வம்பு கோழி வெஞ்சினம் பிணி மஞ்சுயர் எண்திசை அன்னம் தன்னை

பொன்னிவர் மேனி முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்